# பாடத்திட்டம்

## தமிழ்

# அரசகரும மொழிகள் தேர்ச்சி

# தொகுதி - 2

அரசகரும மொழிகள் திணைக்களம்

**அரசகரும மொழிகள் தேர்ச்சித் தொகுதி – 2 பாடப் பரப்பு- தமிழ்**

**அறிமுகம்**

அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக 7/2007 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரச உத்தியோகத்தர்களும் தமது அரச சேவையில் இணைந்த அரசகரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரசகரும மொழியிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அதற்கமைய சிங்கள மொழியின் மூலம் அரச சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களால் சித்தியடைய வேண்டிய அரசகரும மொழித் தேர்ச்சி 2 வது தொகுதியின் **தமிழ்** பாடத்திட்டத்தில் உள்ளடக்கம் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கல்வியலாளர் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் உள்ளடக்கங்களை மீறாமல் அதற்கமைய இப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இரண்டாம் மொழியாக தமிழ் மொழியைக் கற்கும் போது கட்டாயமாகப் பெற்றுக்கொள்ள வேண்டிய அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பான்மை என்பன இப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இரண்டாம் மொழியைக் கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறைகள் மற்றும் கற்கை நெறியின் மதிப்பீடு வழிமுறைகள் இப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் பாடப் புத்தகம் கற்கைநெறியைச் செயற்படுத்துவதற்கு வழிகாட்டலாக இருக்கும். கற்கைநெறியின் கற்றல் மற்றும் கற்பிக்கும் செயற்பாடுகளை அதன்படி ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். அதற்காக இரண்டாம் மொழியினைக் கற்பித்தலுக்கு உரிய பயிற்சியைப் பெற்ற வளவாளரின் பங்களிப்பானது பயிலுனர்களுக்கு மிக அத்தியாவசியமானதாகும்.

**நோக்கங்கள்**

01. மொழியின் எழுத்து மற்றும் பேச்சு ஆகிய இரு துறைகளிலும் வெற்றிகரமாக தொடர்பாடல் செய்வதற்கான ஆற்றலைப் பெற்றுக் கொள்ளல்.

02. தனது தொழிலுக்குரிய நாளாந்த நிர்வாகக் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு ஆற்றலை வளர்த்துக்கொள்ளல்.

03. வினைத்திறன் மிக்கதாக மொழியைப் பயன்படுத்தி சிறந்த பொதுமக்கள் தொடர்புகளை கட்டியெழுப்புவதற்கு ஆற்றலைப் பெற்றுக் கொள்ளல்.

04. மொழியின் எழுத்து மற்றும் பேச்சு ஆகிய இரு துறையிலும் கட்டுரை மற்றும் மொழி பெயர்ப்பு செய்யும் ஆற்றலைப் பெற்றுக் கொள்ளல்.

05. மாற்றொலிகளையும் அவை வரும் இடங்களையும் நன்கறிந்து மாணவர்களைப் பயிற்றுவிக்கக்கூடியதும் சரியாக உச்சரிக்கக் கூடியதுமான பயிற்சிகளைப் பெற்றிருத்தல் முக்கியமானது. (அ, ஆ, இ, ஈ, உ, எ, ஏ, க, ச, த, ப, ட, ற) ஆகிய எழுத்துக்களின் மாற்றொலிகளைச் சரியாக உச்சரிக்கக்கூடிய ஆற்றலை வளர்த்தல். (ல, ள, ழ, ர, ற, ன, ந, ண) ஆகிய ஒலிகளையும் வேறுபடுத்தி சரியாக உச்சரிக்கக்கூடிய ஆற்றலை வளர்த்தல்.

**அரசகரும மொழிகள் தேர்ச்சித் தொகுதி – 2 பாடப் பரப்பு - தமிழ்**

**கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறை**

இரண்டாம் மொழியினைக் கற்பிக்கும் போது விசேடமான கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறைகள் பயன்படுத்தப்படுகிறது. அவ்வாறான விசேட வழிமுறைகளைப் பயன்படுத்தி பயிலுநர்களுக்கு இரண்டாம் மொழியாக தமிழ் மொழியினை கற்பிப்பது மிகப் பயனுள்ளதாக இருக்கும். கற்கைநெறியினைப் பயிலுவோருக்கு இப் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாட உள்ளடக்கங்களை வழங்கும்போது பயன்படுத்தகூடிய வழிமுறைகள் மற்றும் கற்பிக்கும் உத்திகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. நேரடி முறைகள் (Direct method)
2. இலக்கண மொழிபெயர்ப்பு முறை (Grammar translation method)
3. பிரயோக முறை (Applied method)
4. இருமொழி முறை (Bilingual method)
5. எழுத்து வடிவ ஒற்றுமை முறை (Shape similarity method)
6. ஒலிப்பு முறை (Phonetic method)
7. ஒலியுடன் கூடிய மொழி முறை (Audio lingual method)
8. தேர்ந்தெடுக்கப்பட்ட முறைமை/ பன்முக முறை (Eclectic method)
9. புலனுணர்வு சார்ந்த / அறிவாற்றல் (Cognitive method)
10. சூழ்நிலை முறை (Situational method)
11. இயற்கை முறை (Natural method)
12. விகடம் நினைவாற்றல் முறை (Mimicry memorization method)

**அரசகரும மொழிகள் தேர்ச்சித் தொகுதி - 2 பாடப் பரப்பு- தமிழ்**

**மதிப்பாய்வு மற்றும் மதிப்பீடு செயற்பாடு**

அரசகரும மொழி தேர்ச்சியைப் பெறுவதற்குத் தொகுதி 2 ஆக தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு 250 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பாடத்திட்டத்திற்கு அமைவாக அரசகரும மொழி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறியின்போது மதிப்பீடு செயற்பாடு இரண்டு வகையாக நடைபெறும்.

1. கற்கைநெறியின் இடையில் நடைபெறும் மதிப்பாய்வு.
2. கற்கைநெறியின் இறுதியில் நடைபெறும் மதிப்பீடு.

1. **கற்கைநெறியின் இடையில் நடைபெறும் மதிப்பாய்வு.**

இங்கு கற்கைநெறியினைப் பயிலுவோர் கற்கைநெறியின் இடையில் அடிக்கடி மதிப்பாய்வுகளுக்கு உட்படுத்தப்படுவார்கள். தயாரிக்கப்பட்ட மதிப்பாய்வு சாதனங்களை உபயோகித்து நடாத்தப்படும் மதிப்பாய்வு செயற்பாடு குறைந்தது 25 மணித்தியாலங்களுக்கு ஒரு முறையாவது நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. முன்மாதிரி மதிப்பாய்வு சாதனங்கள் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். இதைத் தவிர கற்றல் மற்றும் கற்பிக்கும் செயற்பாட்டிற்கு இடையில் ஆலோசகரினால் கற்கைநெறியினைப் பயிலுவோர் மதிப்பாய்வு செய்யப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ச்சியாக மதிப்பீட்டுச் செயற்பாட்டினால் எதிர்பார்ப்பது கற்கைநெறியினைப் பயிலுவோரின் உத்தேச கற்றல் பெறுபேற்றைப் பெற்றுள்ள மட்டங்களை அறிந்து கொள்ளுவதற்கும் அதற்கமைய அடுத்துவரும் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்குமான வாய்ப்புகளை வழங்குவதற்குமாகும். உத்தேச கற்றல் பெறுபெறுகளைப் பெற்றிராத கற்கைநெறி பயிலுவோரின் உத்தேச கற்றல் பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ளுவதற்காகத் தகுந்த நடவடிக்கைகள் ஆலோசகர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகிறது. உத்தேச கற்றல் பெறுபெறுகளை இனங்காண்பதற்கு பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் பெறுபேறுகள் வழிகாட்டலாக அமையும்.

2. **கற்கைநெறியின் முடிவில் நடைபெறும் மதிப்பீடு**.

இம் மதிப்பீடு செயற்பாடு இரண்டு கட்டங்களாக நடைபெறும்.

எழுத்துப் பரீட்சை மதிப்பெண்கள் 70% இரண்டு வினா பத்திரங்கள் (நேரம் 03 மணித்தியாலம்)

01 வினா பத்திரம் - இலகுவான இலக்கணம் மற்றும் சொற்களை பயன்படுத்துதல் ( மதிப்பெண்கள் 20 %)

02 வினா பத்திரம் - புரிந்துணர்வு, கட்டுரை, கடிதங்கள், சுருக்கம், மொழிபெயர்ப்பு, கூட்டஅறிக்கை (மதிப்பெண்கள் 50 )

செயன்முறை பரீட்சை (வாய்மூல) மதிப்பெண்கள் 30% (நேரம் 30 நிமிடம்)

| | |
|---|---|
| வாசித்தல் | - 05 |
| செவிமடுத்தல் | - 10 |
| பேசுதல் | - 15 |

எழுத்துப் பரீட்சை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினாலும் செயன்முறை பரீட்சை (வாய்மொழி) அரசகரும மொழிகள் திணைக்களத்தினாலும் நடாத்தப்படும். அரசகரும மொழி தேர்ச்சியில் சித்தியடைவதற்கு எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மூல பரீட்சை இரண்டிலும் சித்தியடைவது அவசியமாகும். எழுத்து மற்றும் வாய்மொழி பரீட்சைகளுக்காக பாடத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ள கற்றல் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு கூற்றுகள் தயாரிக்கப்படும். முன் மாதிரி எழுத்து மற்றும் பரீட்சை சாதனங்கள் மற்றும் மதிப்பீடு பெறுபேறுகள் கூற்றுக்கள் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

| அலகு | நோக்கம் | பொருளடக்கம் | எதிர்பார்க்கும் கற்றல் முடிவுகள் | கற்கும் கற்பிக்கும் முறைமை | நேரம் மணித்தியாலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 1.1 -ங்கோ, -உங்கோ உடனான சொற்களை அறிந்துகொள்வர்.<br><br>1.2 உறவுச் சொற்களை அறிந்து கொள்வர்.<br><br>1.3 பெயர்சொற்களை கற்பர்.<br><br>1.4 இஞ்சை, அங்கை, உங்கை, அது, இது, உது போன்ற சுட்டுப் பெயர்களை அறிவர்.<br><br>1.5 வேற்றுமை உருபு ஐ<br>1.6 சிறு சிறு வாக்கியங்களை உருவாக்கிக் கதைக்கப் பழகுவர்.<br>1.7 எழுத்துக்களை எழுதப் பழகுவர். | -ங்கோ, -உங்கோ<br><br>உறவுச் சொற்கள்<br><br>உணவு<br><br>ஐ வேற்றுமை உருபு<br><br>ட், ப், ம், ச், க், த், ற் அ எழுத்துக்களை எழுதுதல். | -ங்கோ, -உங்கோ பயன்படுத்தும் சொற்களைக் கூறப் பழகுவர்.<br><br>பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் பயன்படுத்தி இலகுவான வாக்கியங்களை அமைத்துப் பேசப் பழகுவர்.<br><br>ட், ப், ம், ச், க், த், ற் அ எழுத்துக்களை எழுதி உச்சரிக்கப் பழகுவர். | • எடுத்துக்காட்டும் முறை<br>• நேரடி முறை<br>• விகடம் நினைவாற்றல்<br>• இருமொழி முறை<br>• பாத்திர நடிப்பு<br>• ஒலியுடன் கூடிய மொழி முறை | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| 2 | 2.1 சாப்பாட்டுக் கடையில் உரையாடல்களை செவிமடுப்பர்.<br><br>2.2 இருக்கு, வெறும், புது, புதுசு<br>2.3 ஏவல் வினை, வினையெச்சம் (வாங்கோ, வர)<br>2.4 வேணும் - வேண்டாம்<br>2.5 .... உம் சொற்களையும், இடைச் சொல்லையும் பயன்படுத்துவர்.<br><br>2.6 எழுத்துக்களை எழுதி சொற்களைப் பழகுவோம். | சாப்பாட்டுக் கடையில் உரையாடல் போன்று கதைக்கப் பழகுதல்<br><br>இருக்கு, வெறும், புது, புதுசு சொற்களை வைத்து கதைக்கப் பழகுதல்.<br><br>வா- வாங்கோ- வர<br>குடி- குடியுங்கோ- குடிக்க - போன்ற - ஏவல், வினை, வினை எச்சங்களை உருவாக்கிப் பழகுதல்.<br><br>-உம் இடைச்சொல்லை பயன்படுத்துதல்.<br><br>ய், ர், ல், வ், ழ், ள் ஆ எழுத்துக்களை எழுதி உச்சரிக்கப் பழகுதல். | சாப்பாட்டுக் கடையில் உரையாடல் போன்று கதைக்கப் பழகுவர்.<br><br>சிறு சிறு வாக்கியங்களை அமைத்துக் பேசப் பழகுவர்.<br><br>இருக்கு, வெறும், புது, புதுசு போன்ற சொற்களை வைத்து கதைக்கப் பழகுவர்.<br><br>ஏவல் வினை, வினை எச்சங்களை உருவாக்குவர்.<br><br>ய், ர், ல், வ், ழ், ள் ஆ எழுத்துக்களை எழுதி உச்சரிக்கப் பழகுவர். | • எடுத்துக்காட்டும் முறை<br>• பாத்திர நடிப்பு<br>• குழு முறைமை | 10 |
| 3 | 3.1 இலகுவான சொற்களை உரையாடலின் போது பயன்படுத்துவர்.<br><br>ஒருவர் ஒருவரை அறிமுகம் செய்வர்.<br><br>3.2 -ரை, -இன்ரை வேற்றுமை உருபைப் பயன்படுத்திக் கதைக்கப் | • தொலைபேசி இலக்கம்<br>• வேலை செய்யும் இடம் ஆகியவற்றைக் கேட்டல்.<br><br>❖ என்ரை<br>❖ உன்ரை<br><br>-செய் | இருவர் அறிமுகம் செய்தல் போன்று உரையாடல்களின் மூலம் சிறு சிறு கேள்விகளை வினவுவர்.<br><br>கதைக்கப் பழகுவர்.<br><br>ரை, இன்ரை, இலை வேற்றுமைகளை அறிந்து கொள்ளுவர். | • எடுத்துக்காட்டும் முறை<br>• பாத்திர நடிப்பு<br>• குழு முறைமை | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பழகுவர்.<br><br>3.3 நிகழ்காலத்தை கற்பர்<br>3.4 -இலை வேற்றுமை உருபு<br>3.5 போயிற்று.... , செய்திட்டு.....<br><br>3.6 இலக்கங்களைக் கற்பர்.<br>1-10 வரை உச்சரிப்பர்.<br><br>3.5 எழுத்துக்களை எழுதப் பழகுவர். | o என்னிலை<br>o எங்களிலை ஆகியவற்றை வைத்துக் கதைக்கப் பழகுதல்.<br><br>0 - 10 வரை உச்சரித்தல்.<br><br>ங், ஞ், ண், ந், ன் இ எழுத்துக்களை எழுதிப் உச்சரிக்கப் பழகுதல். | எழுத்துக்களை எழுதிப் பழகுவர்.<br><br>இ உயிர்மெய் எழுத்துக்களை எழுதுவர்.<br><br>ங், ஞ், ண், ந், ன் எழுத்துக்களை எழுதிப் உச்சரிக்கப் பழகுவர். | | |
| 4 | 4.1 செயல்முறையில் செவிமடுப்பார். (கிராம உத்தியோகத்தருடன் உரையாடப் பழகுவார்.)<br><br>4.2 வினைச் சொற்களை, பேசும் போது சரியான முறையில் பயன்படுத்துவார்.<br><br>4.3 வினாச் சொற்களைப் பொருத்தமான முறையில் பயன்படுத்தி பேசுவார்.<br><br>4.4 இலக்கங்களை கற்பர். (11-20 வரை)<br>4.5 நிகழ்காலத்தை கற்பர்.<br>4.6 வேற்றுமை உருபு | கலந்தரையாடல் ஆலோசனை கூட்டங்கள்<br>கிராம சேவை உத்தியோகத்தருடன் கலந்துரையாடல் போன்றவற்றைப் பழகுதல்.<br><br>-க்காக, -உக்காக சொல்லை வைத்து கதைக்கப் பழகுதல்.<br><br>வினா சொற்களை வைத்துக் கதைத்தல்.<br><br>11-20 வரை இலக்கங்களை பேசப் பழகுதல். | • கலந்தரையாடல் அல்லது ஆலோசனையொன்றில் செவிமடுத்து விடயங்களை புரிந்து கொள்வார்<br>• கருத்துக்களைக் கூறும் போது சொற்களை சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பயன்படுத்துவார்<br><br>• விடயங்களைத் தெரிந்து கொள்வதற்கு வினாக்களைக் கேட்பார்<br>.<br>• எழுத்துக்களை எழுதிப் பழகுதல். ஈ எழுத்தின் உயிர்மெய் எழுத்துக்களைக் கற்பார். | • இருமொழி முறை<br>• நேரடி முறை<br>• ஒலியுடன் கூடிய மொழி முறை<br>• இருமொழி முறை<br>• நேரடி முறை<br>• எடுத்துக்காட்டும் முறை<br>• விகடம் நினைவாற்றல்<br>• பயிற்சி முறை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (க்கு, உக்கு, அக்கு, ஐ) வைத்து கதைப்பர்.<br><br>4.7 -ஏக்கை சொல்லை வைத்துக் கதைக்கப் பழகுவர்.<br><br>4.5 எழுத்துக்களை எழுதப் பழகுவர். | நிகழ்காலம் -வா செய்துகொண்டு<br>ஐ<br>எனக்கு மட்டுமா?<br>எனக்கு மட்டும் தான் போன்றவற்றைப் பழகுதல். எழுதுதல்.<br><br>வட எழுத்து<br>ஈ எழுத்தின் உயிர்மெய் எழுத்துக்களைக் கற்றல். | • -க்காக, -உக்காக என்பவற்றைப் பாவித்து கதைக்கப் பழகுவார்.<br>• 11-20 வரை இலக்கங்களை வைத்து பேசப் பழகுவார்.<br>• நிகழ்காலச் சொற்களை ஆக்கிக் கதைக்கப் பழகுவார். | | |
| 5 | 5.1 உரையாடல்களுக்கு செவிமடுத்து கருத்துக்களை தெரிவிப்பார்.<br><br>5.2 -இலை, -இருந்து உருபுகளைப் பயன்படுத்தி வாக்கியங்கள் அமைத்துப் பழகுவர்.<br><br>5.3 வந்திட்டன், வந்து கொண்டிருக்கிறன், வாறன், வந்தனான் போன்றவற்றைப் பழகுவர்.<br><br>5.3 வினைதிறனை வெளிப்படுத்தி இலக்கங்களை எழுதுவர்.<br><br>5.4 காலத்தை உணர்த்தும் | தமிழ் எழுத்து முறையில்<br><br>• மெல்லின, இடையின எழுத்துக்களை அறிதல்.<br><br>• அவற்றில் சொற்கள் அமைத்தல்.<br>• இலை, இருந்து உருபுகளைப் பயன்படுத்துதல்.<br>• காலங்களை அறிதல்.<br>• 21-30 வரை இலக்கங்களை அறிதல்.<br>• -அளவிலை என்ற சொல்லுடன் நேரத்தைக் | • வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்களை எழுதுதல்<br><br>• சொற்கள் எழுதுவர்.<br>• காலங்களை அறிந்து கதைக்கப் பழகுவார்.<br>• இலை, -இருந்து உருபுகளைப் பயன்படுத்துவார்.<br>• 21-30 வரை இலக்கங்களை உச்சரிக்கப் பழகுவர்.<br>• -அளவிலை என்ற சொல்லுடன் ஓடை, ஆலை வேற்றுமை உருபை வைத்து கதைக்கப் பழகுவார்.<br>• உ, ஊ உயிர்மெய் எழுத்துக்களைக் கற்பார். | • இருமொழி முறை<br>• நேரடி முறை<br>• எடுத்துக்காட்டும் முறை<br>• விகடம் நினைவாற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒப்பீட்டு முறைமை | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஐந்தாம் வேற்றுமை உருபுகளைக் கொண்ட பெயர்ச் சொற்களைப் பயன்படுத்துவார்<br><br>5.2 சரியான முறையில் உச்சரித்து சொற்கள் மற்றும் எழுத்துக்களை உச்சரிப்பர். | கூறுதல்.<br>• ஆலை, ஓடை வேற்றுமை உருபை வைத்து கதைக்கப் பழகுதல்.<br>• உ, ஊ எழுத்தின் உயிர்மெய் எழுத்துக்களைக் கற்றல். | | | |
| 6 | 6.1 தொலைபேசி உரையாடலை அறிவார்.<br><br>6.2 உறுப்புக்களைச் சரியான முறையில் பயன்படுத்தி சொற்களை வாசிப்பார்.<br><br>6.3 நிறங்களை அறிந்து கொள்ளுதல்.<br><br>6.4 தமிழ் எழுத்துக்களை எழுதுதல்.<br>6.5 சரியான முறையில் எழுத்துக்களை சொற்களை வாசித்தல்.<br>6.6 நிகழ்காலத்தை அறிதல். | உறுப்புக்களுடன் கூடிய எழுத்து சொற்களை வாசித்தல்.<br><br>தன்னைப் பற்றிக் கூறுதல்.<br>நிகழ்காலச் சொற்களை ஆக்கிக் கதைக்கப் பழகுதல்.<br><br>இலை வேற்றுமை உருபை வைத்துக் கதைத்தல்.<br><br>கிழமை நாட்கள், நிறங்களை அறிதல்.<br><br>-ஆய் என்ற உருபைப் பழகுதல்.<br><br>-ஆன என்ற உருபை அறிதல்.<br><br>எ, ஏ, ஐ உயிர்மெய் | • உறுப்புக்களுடன் கூடிய எழுத்துக்களை எழுதுதல்<br>• உறுப்புக்களுடன் கூடிய சொற்களை வாசித்தல்<br>• தன்னைப் பற்றிக் கூறப் பழகுவர்.<br>• நிகழ்கால சொற்களை ஆக்கிப் பேசப் பழகுவர்.<br>• கிழமை நாட்கள், நிறங்களை வைத்து கதைக்கப் பழகுவர்.<br>• -ஆய் என்ற உருபை வைத்துக் கதைக்கப் பழகுவார்.<br>• -ஆன என்ற உருபை வைத்துக் கதைக்கப் பழகுவார்.<br>• எ, ஏ, ஐ உயிர்மெய் எழுத்துக்களை எழுதி சொற்களை ஆக்கப் பழகுவார். | • இருமொழி முறை<br>• நேரடி முறை<br>• எடுத்துக்காட்டும் முறை<br>• விகடம் நினைவாற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒப்பீட்டு முறைமை | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | எழுத்துக்களை அறிதல். | | | |
| 7 | 7.1 தொலைபேசி உரையாடலை அறிவார்.<br><br>7.2 மாதங்கள், நேரம் ஆகியவற்றை அறிந்து கொள்ளல்<br><br>7.3 எதிர்கால வாக்கியங்களை அறிந்து கொள்ளல். | • சமூக தொடர்புகள்<br>• வேற்றுமை உருபுகள்<br>• முன்னிடைச் சொற்களை பயன்படுத்தல்.<br>• தொலைபேசி உரையாடலை அறிதல்.<br>• இண்டைக்கு, நாளைக்குப் போன்ற சொற்களை அறிதல்.<br>• கால், அரை, முக்கால் போன்றவற் றை அறிவர்.<br>• மாதங்களை அறிதல்.<br>• ட்டை, அட்டை, இட்டை வேற்றுமை உருபை அறிதல்.<br>• எதிர்கால வாக்கியம் அமைத்தல்.<br>• ஒ, ஓ, ஒள உயிர்மெய் எழுத்துக்களை | • சொற்களை வாசிப்பர்.<br>• வாக்கியங்களை வாசிப்பர்.<br>• ஒத்த, இணைச் சொற்களை எதிர்காலத்திற்கு பொருத்தமான முறையில் பயன்படுத்துவர்.<br>• தொலைபேசி உரையாடலை பழகுவார்.<br>• இண்டைக்கு, நாளைக்குப் போன்ற சொற்களை அறிவார்.<br>• கால், அரை, முக்கால் போன்றவற்றைப் பயன்படுத்தி நேரத்தைக் கூறப்பழகுவார்.<br>• ட்டை, இட்டை, அட்டை வேற்றுமை உருபை அறிவார்.<br>• பேச்சுத்தமிழில் எதிர்கால வாக்கியம் அமைத்துக் கதைக்கப் பழகுவார்.<br>• ஒ, ஓ, ஒள எழுத்துக்களை அறிவர். | • இருமொழி முறை<br>• நேரடி முறை<br>• எடுத்துக்காட்டும் முறை<br>• விகடம் நினைவாற்றல்<br>• பயிற்சி முறை<br>• ஒப்பீட்டு முறைமை | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | அறிதல். | | | |
| 8 | 8.1 பேச்சுத் தமிழ் எழுத்துத் தமிழுக்கு மாறும் விதத்தினைக் கற்பார்.<br><br>8.2 ஒலி உச்சரிப்புக்களை அறிந்து உச்சரித்தல்.<br><br>8.3 அ, ஆ மாற்றொலிகளை அறிவார். | சொற்களை வாசித்தல்<br><br>பேச்சுத் தமிழ் எழுத்துத் தமிழுக்கு மாறுதல்.<br><br>வாக்கியங்களை வாசித்தல்.<br><br>காலங்களை அறிதல்.<br><br>ஒத்த, இணைச் சொற்களை பொருத்தமான முறையில் பயன்படுத்தல்.<br><br>இலக்கம் 1-20<br><br>அ, ஆ மாற்றொலிகளை அறிதல். | காலங்களை அறிவர்.<br><br>பேச்சுத்தமிழ் எழுத்துத் தமிழாக மாறும் விதத்தை அறிவார்.<br><br>இலக்கம் 1-20 வரை அறிவார்.<br><br>ரை, இன்ரை, இலை, க்கு, உக்கு, அக்கு வேற்றுமை உருபுகளை அறிவர்.<br><br>அ, ஆ மாற்றொலிகளை அறிவார். | • எழுத்து முறைமை<br>• நேரடி முறை<br>• பயிற்சி முறை<br>• இருமொழி முறை<br>• பாத்திர நடிப்பு<br>• விகடம் நினைவாற்றல் | 10 |
| 9 | 9.1 பேச்சுத் தமிழ் எழுத்துத் தமிழுக்கு மாறும் விதத்தினை கற்றல். (எமது நாடு)<br><br>9.2 எதிர்காலத்தை பேச்சு எழுத்து தமிழில் அறிவர்.<br><br>9.3 ஒலி உச்சரிப்புக்களை | எமது நாடு பற்றி பேச்சு, எழுத்துத் தமிழில் எழுதும் அறிவைப் பெறல்.<br><br>இ, ஈ, உ மாற்றொலிகளை அறிதல். | • கதைப்பதற்கு பெயரெச்சங்களை பயன்படுத்தல்.<br>• எமது நாடு பற்றி பேச்சு, எழுத்து அறிவைப் பெறுவார்.<br>• இ, ஈ, உ எழுத்துக்களில் மாற்றொலிகளை அறிவர்.<br>• 21-100 வரை இலக்கங்களை பேச்சு, எழுத்துத் தமிழில் அறிவர். | • எடுத்துக்காட்டும் முறை<br>• பயிற்சி செய்யும் முறை<br>• பிரயோக முறை | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறிந்து உச்சரிப்பர்.<br><br>9.4 இ, ஈ, உ எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிவார்.<br><br>9.5 21-100 இலக்கங்களை அறிதல். (பேச்சு - எழுத்துத்தமிழில் எழுதி உச்சரிப்பர்)<br><br>9.6 எல்லாம் எல்லாரும் சொற்பிரயோகத்தை அறிவர். | எல்லாம், எல்லாரும் சொற்பிரயோகத்தை அறிதல்.<br><br>21-100 வரை இலக்கங்களை அறிதல்.<br><br>பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழில் மாறும் விதத்தை அறிதல்.<br>(எல்லாம், எல்லாரும்)<br><br>வாக்கியங்களை வாசித்தல்<br><br>ஒத்த, இணைச் சொற்களை பொருத்தமான முறையில் பயன்படுத்துதல். | • எல்லாம், எல்லாரும் பேச்சு - எழுத்துத்தமிழ் மாறுவதை அறிவர்.<br>• எதிர்கால வாக்கியங்கள் பேச்சு, எழுத்துத் தமிழில் அறிவர். | | |
| 10 | 10.1 பேச்சுத் தமிழ் எழுத்துத் தமிழுக்கு மாறும் விதத்தினை கற்பார். | பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழில் மாறும் விதத்தை அறிதல். (எல்லாம், எல்லாரும்)<br><br>(-ஆல் தான்<br>-இல்லையெண்டால்<br>-வேண்டிவரும்<br>-ஏலாது - முடியாது<br>-ஒருவர் - ஒருவரை)<br>போன்ற சொற்களைப் பாவித்தல். | • அறிவித்தலொன்றை செவிமடுத்து அதற்கமைய செயற்படுத்துவர்.<br><br>• பேச்சுத்தமிழ் எழுத்துத் தமிழில் மாறும் விதம் பற்றிக் கற்பார். (எல்லாம், எல்லாரும்)<br><br>(-ஆல் தான்<br>-இல்லையெண்டால்<br>-வேண்டிவரும்<br>-ஏலாது - முடியாது<br>-ஒருவர் - ஒருவரை) போன்ற | • எடுத்துக்காட்டும் முறை<br>• பயிற்சி செய்யும் முறை<br>• இருமொழி முறை<br>• பாத்திர நடிப்பு<br>• புலனுணர்வு சார்ந்த / அறிவாற்றல் | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | எ, ஏ எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிதல். | சொற்களை வைத்து வாக்கியம் அமைப்பர்.<br><br>• எ, ஏ எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிவார். | | |
| 11 | 13.1 தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகப் பல்வேறு ஆவணங்களை வாசித்தல்.<br><br>13.2 கடிதம் எழுதப் பழகுவார்.<br><br>13.3 -ஓடை -இலை இருந்து வேற்றுமை உருபுகளை அறிவார்.<br><br>13.4 இறந்த காலத்தை அறிவார்.<br><br>13.5 க, ச எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிவார். | கடிதங்களை வாசித்தல்.<br>க, ச எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிதல்.<br><br>கடமை கடிதங்கள்<br><br>சுற்றறிக்கைகள்.<br><br>பல்வகை கடிதங்கள் போன்றவற்றை அறிதல்.<br><br>-ஓடை -இலை இருந்து வேற்றுமை உருபுகளை அறிதல்.<br><br>இறந்த காலத்தை அறிதல். | கடிதங்களை வாசிப்பர்.<br><br>க, ச எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிவார்.<br><br>கடமை கடிதங்களை எழுதி வாசிப்பார்.<br><br>சுற்றறிக்கையை வாசிப்பார்.<br><br>-ஓடை -இலை இருந்து வேற்றுமை உருபுகளை பயன்படுத்தி வாக்கியம் அமைப்பார்.<br><br>இறந்த காலம் பேச்சு, எழுத்தில் மாறும் விதத்தை அறிவார். | • எடுத்துக்காட்டும் முறை<br>• பயிற்சி செய்யும் முறை<br>• இருமொழி முறை<br>• பிரயோக முறை<br>• புலனுணர்வு சார்ந்த / அறிவாற்றல் | 10 |
| 12 | 12.1 பேச்சுத் தமிழ் எழுத்துத் தமிழுக்கு மாறும் விதத்தினை கற்றல்.<br><br>12.2 100-1000 வரை பேச்சு எழுத்தாக மாறுவதை | பத்திரிகை கட்டுரைகள் இலகுவான வசன நடைகள் வினைத்திறனான உரையாடல்களைக் கற்றல். | • பத்திரிகை கட்டுரைகள் வாசித்து தகவல்களை முன்வைப்பர்.<br>• 100-1000 வரை இலக்கங்களை பேச்சுத்தமிழில் இருந்து | • ஒலியுடன் கூடிய மொழி முறை<br>• இருமொழி முறை<br>• எடுத்துக்காட்டும் முறை<br>• நேரடி முறை | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறிவார்.<br><br>12.3 எதிர்கால, இறந்தகால வாக்கியம் அமைத்துப் பழகுவார்.<br><br>12.4 த, ப எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிவார். | 100-1000 வரை பேச்சு எழுத்தாக மாறுவதை அறிதல்.<br><br>எதிர்கால, இறந்தகால வாக்கியம் அமைத்தல்.<br><br>த, ப எழுத்துக்களின் மாற்றொலிகள் மாற்றொலிகளை அறிதல். | எழுத்துத் தமிழுக்கு மாற்றுவார்.<br><br>• த, ப எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிவார். | • பயிற்சி முறை | |
| 13 | 12.1 பேச்சுத் தமிழ் எழுத்துத் தமிழுக்கு மாறும் விதத்தினைக் கற்பார்.<br><br>13.2 எழுதும் போது எழுத்து ஒழுங்கு விதிகளை பின்பற்றுவார்.<br><br>13.3 ட, ர, ற எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிவார். | எழுத்து ஒழுங்கு விதிகளை அறிதல்.<br><br>ட, ர, ற எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிதல்.<br><br>நிறங்கள், கிழமை நாட்கள் பேச்சு எழுத்துத் தமிழில் அறிதல்.<br><br>காலங்களை அறிதல். | • ட, ர, ற எழுத்துக்களின் மாற்றொலிகளை அறிவார்.<br><br>• நிறங்கள், கிழமை நாட்கள் பேச்சுத்தமிழ் எழுத்துத் தமிழாக மாறும் விதத்தை அறிவர்.<br><br>• காலங்களை அறிவார். | • எடுத்துக்காட்டும் முறை<br>• பயிற்சி செய்யும் முறை<br>• பிரயோக முறை | 15 |
| 14 | 14.1 இறந்தகால சொற்களை ஆக்கப் பழகுவர்.<br><br>14.2 -மாட்ட் எதிர்கால எதிர்மறைச் சொற்களை வைத்து வாக்கியங்கள் அமைக்கப் பழகுவர். | -மாட்ட் எதிர்கால எதிர்மறை சொற்களை ஆக்கப் பழகுதல். | இறந்த காலச் சொற்களைப் பேச்சு எழுத்துத் தமிழில் ஆக்கிப் பழகுவார்.<br><br>-மாட்ட் எதிர்கால எதிர்மறை வாக்கியங்களை அமைப்பர்.<br><br>ர,ற, ல,ள,ழ, ன,ண, ந ஒலி வேறுபாடுகளை அறிவர். | • எடுத்துக்காட்டும் முறை<br>• பயிற்சி செய்யும் முறை<br>• இருமொழி முறை<br>• புலனுணர்வு சார்ந்த / அறிவாற்றல் | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 14.3 ர, ற, ல, ள, ழ, ந, ன, ண வேறுபாடுகளை அறிவர். | | | | |
| 15 | 15.1 குறுகிய ஆவணங்களை மொழிபெயர்ப்பார்.<br><br>15.2 வினையடிகள், வினையெச்சங்கள் போன்றவற்றைப் பழகுவார்.<br><br>15.3 மீட்டல் பயிற்சி செய்வார். | • கடிதங்கள் எழுதுதல்.<br>• சிறு சிறு ஆவணங்கள் எழுதுதல்.<br>• மீட்டல் பயிற்சி செய்தல். | குறுகிய ஆவணங்களை தமது மொழிக்கு மொழிபெயர்ப்பர். மீட்டல் பயிற்சியைப் பெறுவர். | • எடுத்துக்காட்டும் முறை<br>• பயிற்சி செய்யும் முறை<br>• இருமொழி முறை<br>• புலனுணர்வு சார்ந்த / அறிவாற்றல் | 10 |
| 16 | 16.1 தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக பல்வேறு ஆவணங்களை வாசிப்பர், அறிவித்தல்களை வாசிக்கப் பழகுவர்.<br><br>16.2 காலம், வேற்றுமை உருபுகள் பழகுவர்.<br><br>16.3 திசைகள் , மாதங்களைக் கற்பர். | • அறிவித்தல்<br>• சுற்றறிக்கை<br>• தொழினுட்ப மற்றும் ஏனைய ஆவணங்கள் போன்றவற்றை வாசித்தல். எழுதுதல்.<br>• காலம், வேற்றுமை உருபுகள் ஆகியவற்றைப் பழகுதல்.<br>• திசைகள், | ▪ சுற்றறிக்கை வாசிப்பர்.<br>▪ பல்வேறு கூற்றுக்கள் வாசிப்பர்.<br>▪ தொழினுட்ப மற்றும் ஏனைய ஆவணங்களை வாசிப்பர், எழுதுவர்.<br>▪ காலம், வேற்றுமை உருபுகளைப் பழகுவர்.<br>▪ திசைகள் மாதங்களைக் கற்பர். | • எடுத்துக்காட்டும் முறை<br>• பயிற்சி செய்யும் முறை<br>• இருமொழி முறை<br>• புலனுணர்வு சார்ந்த / அறிவாற்றல் | 20 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | மாதங்களைக் கற்றல். | | | |
| 17 | 17.1 தமது தொழில்சார் ஆவணங்களை எழுதுவர்.<br><br>17.2 விளம்பரங்களை எழுதப் பழகுவர்.<br><br>17.3 கூட்ட அறிக்கை எழுதப் பழகுவர்.<br><br>17.4 சந்தியை அறிவர். | கடமை ரீதியான கடிதங்கள் எழுதுதல்.<br><br>விண்ணப்பப் படிவம் நிரப்புதல்.<br><br>விண்ணப்பப் படிவம் தயாரித்தல்.<br><br>சந்தியை அறிதல்.<br><br>அழைப்பிதழ் தயாரித்தல்.<br><br>கூட்ட அறிக்கை எழுதப் பழகுதல். | கடமை ரீதியான கடிதங்கள் எழுதுவர்.<br><br>விளம்பரங்களை எழுதுவர்.<br><br>விண்ணப்பப் படிவம் நிரப்புவர்.<br><br>விண்ணப்பப் படிவம் தயாரிப்பர்.<br><br>சந்தியை அறிவர்.<br><br>அழைப்பிதழ் தயாரிப்பர்.<br><br>கூட்ட அறிக்கை எழுதப் பழகுவர். | • எடுத்துக்காட்டும் முறை<br>• பயிற்சி செய்யும் முறை<br>• இருமொழி முறை<br>• புலனுணர்வு சார்ந்த / அறிவாற்றல் | |
| 18 | 18.1 தொழில்சார் கடிதங்களை எழுதுவர்.<br><br>18.2 எழுதும் போது எளிய வாக்கிய விதிகளை பின்பற்றுவர்.<br><br>18.3 பெயரெச்சங்களை அறிந்து வாக்கியம் எழுதுவர்.<br><br>18.3 முன்னாலை போன்ற சொற்களை அறிவர். | • அறிக்கைகள், கடிதங்கள் எழுதுதல். பத்திரிகை வாசித்தல்.<br>• பெயெரெச்சங்களை அறிதல்.<br>• முன்னாலை - முன்னால் போன்ற சொற்களை அறிதல். | கோரிக்கை கடிதங்களை எழுதுவர்.<br><br>சிறு ஆவணங்களைத் தனது மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்வார்.<br><br>பெயரெச்சங்களை அறிவர்.<br><br>முன்னாலை - முன்னால் போன்ற சொற்களை அறிவர். | • எடுத்துக்காட்டும் முறை<br>• பயிற்சி செய்யும் முறை<br>• இருமொழி முறை<br>• புலனுணர்வு சார்ந்த / அறிவாற்றல் | 15 |
| 19 | 19.1 வாய்மூல மற்றும் எழுத்து மொழியில் குறுகிய ஆவணங்களை | வாய்மூலம் எழுத்துமூலம் | • பேச்சு மற்றும் எழுத்து மொழியில் உள்ள வேறுபாடுகளை | • எடுத்துக்காட்டும் முறை<br>• பயிற்சி செய்யும் | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எழுதி மொழிபெயர்ப்பர்.<br><br>19.2 எண்டு - என்று<br>எண்ட - என்ற<br>எண்டது - என்பது<br>எண்டால் - என்றால்<br>போன்ற சொற்களை வைத்து வாக்கியம் அமைப்பர்.<br><br>19.3 ஏக்கை - உம் பொழுது என்பதை வைத்து வாக்கியம் அமைப்பர்.<br><br>19.4 திணைக்களம், அமைச்சுக்கள் மாகாணங்களின், மாவட்டங்களின் பெயர்களை அறிவர். | எண்டு - என்று சொற்களை அறிதல்.<br><br>ஏக்கை - உம் பொழுது சொல்லுருபுகளைப் பாவித்தல். | தெளிவுபடுத்துவர்.<br><br>• பேச்சு மொழியில் இருந்து எழுத்து மொழிக்கு மற்றும் எழுத்து மொழியிலிருந்து பேச்சு மொழிக்கு மொழிபெயர்த்தல்.<br>• எண்டு - என்று<br>எண்ட - என்ற<br>எண்டது - என்பது<br>எண்டால் - என்றால்<br>போன்ற சொற்களை அறிவர். அவற்றை வைத்து வாக்கியம் அமைப்பர்.<br><br>• ஏக்கை - உம் பொழுது என்ற சொல்லை வைத்து எழுதப் பழகுவர். | முறை<br>• இருமொழி முறை<br>• புலனுணர்வு சார்ந்த / அறிவாற்றல் | |
| 20 | 20.1 பேச்சுத் தமிழினை எழுத்துத் தமிழுக்கு மாற்றுவர்.<br><br>20.2 வினையடிகள் பெயரெச்சங்கள் வினையெச்சங்கள்.<br><br>20.3 இறந்த காலத்தை அறிவர். | • இறந்தகால வினைச்சொல்.<br>• முன்னிடைச் சொற்களை பயன்படுத்தல்.<br>• இறந்த காலங்களை அறிதல். | ▪ எழுவாய், பயனிலை வேறுபாடு வேற்றுமைகளை அறிவர்.<br>▪ குறுகிய ஆவணங்களை தமது மொழிக்கு மொழிபெயர்ப்பர்.<br>▪ இறந்த காலங்களை அறிவர். | • எடுத்துக்காட்டும் முறை<br>• பயிற்சி செய்யும் முறை<br>• இருமொழி முறை<br>• புலனுணர்வு சார்ந்த / அறிவாற்றல் | 15 |
| தொடர் மதிப்பீடு | | | | | 15 |
| மொத்தம் | | | | | 250 |